**ஊழியர் நலன்புரி நிதியம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் நலன்புரி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை கணக்கீட்டுத் நியமம் 16 இன் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பான பயனுள்ள ஆயுட்காலம் வருடந்தோறும் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி முழுமையாகத் தேய்விடப்பட்ட ரூபா 76,656,104 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தற்போது வரையும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றின் | இலங்கை கணக்கீட்டுத் நியமம் 16 இன் பிரகாரம் குறித்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை வருடந்தோறும் மீளாய்வு செய்து அதற்கேற்ப தேய்விடல் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

மதிப்பீட்டு பெறுமதி இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08 இற்கு அமைவாக மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆம் திகதி சேவை வழங்குனருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் மூலம் அறவிடப்பட்டிருந்த ரூபா 10,355 மில்லியன் தொழில் ஆணையாளர் கணக்கில் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் பேணப்பட்டு வந்துள்ளது. மேலும், அவ்வாறு வழக்குத் தொடுத்து அறவிடப்பட்டு தீர்க்கப்படும் வரை பொது வைப்புக் கணக்கில் அதுவரை பேணப்பட்டிருந்த ரூபா 301 மில்லினும் அந்தந்த கணக்குகளுக்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பேணப்பட்ட நலன்கள் மற்றும் உரிமை கோரப்படாத நலன்களாக ரூபா 853 மில்லினும் குறைவான சந்தாப் பணமாக ரூபா 1,796 மில்லினும் சந்தா நிதியத்தின் கீழ் காணப்பட்டாலும் அந்த மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் தொழில் ஆணையாளரின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட ரூபா 8,436 மில்லியனில் ரூபா 8,910 மில்லியன் அந்த ஆண்டிற்குள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. 2019.05.28 ஆம் திகதியளவில் ரூபா 248 மில்லியன் ஆக காணப்பட்ட பொது வைப்புக்கள் தினந்தோறும் தீர்க்கப்பட்டு வருவதோடு, அதை விரைவில் தீர்த்து முடிவுறுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>சந்தாப் பணம் வழங்கும் வழிமுறைகளின் குறைபாடு / பலவீனங்களைக் குறைப்பதற்கு தற்போது 50 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட சேவை நிறுவனங்களுக்கு இலத்திரனியல் ஊடகம் மூலம் சந்தாப் பணம் செலுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.<br><br>வங்கிக் கணக்கு தொடர்பான தரவுகளில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் நலன்கள் பணம் திருப்பி அனுப்பப்படும் சந்தர்ப்பங்களில் அவை தீர்க்கப்படும் கணக்குகளுக்கு மீண்டும் அனுப்பப்படும் சந்தர்ப்பம் வரை ''உரிமை கோரப்படாத கணக்கு'' இற்கு செலவு வைக்கப்படும். அக்குறைபாடுகள் தீர்க்கப்பட்டதன் பின் மத்திய வங்கியின் அறிவுரையின்படி | தீர்க்கப்படாது உள்ள சந்தாப் பணம் காலதாமதமின்றி தீர்க்கப்படுவதற்கு வினைத்திறனான வேலைத் திட்டமொன்றை உருவாக்குவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அப்பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>நிறுத்தி வைக்கப்பட்ட கணக்கில் உள்ள மரணமடைந்த அங்கதத்தவர்களின் நலன்கள் மீளச் செலுத்த முடிவது தொழில் ஆணையாளரினால் வழங்கப்படும் கடிதத்தின் மூலம் நிறுத்தி வைக்கப்பட்ட பகுதியை, செலுத்தப்பட வேண்டிய நலனாளிகளுக்கு அனுப்பிய பின்பே ஆகும். | |
| (ஆ) | நிதியத்தினால் பேணப்பட்டு வரும் 07 வங்கிக் கணக்குகள் 12 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் மதிப்பிழந்த காசோலைகள், வைப்பிடப்பட்டும் மாற்றப்படாத காசோலைகள் மற்றும் வைப்பிலிடப்பட்ட காசோலைகள் என்பவற்றின் மொத்த மீதி ரூபா 1,035 மில்லியன் ஆகும். மேலும், வைப்பிலிடப்பட்டும் தீர்வையாகாத காசுக் கட்டளைகள், தீர்வையாகாத காசோலைகள் மற்றும் வழங்கப்பட்டபோதும் வைப்பிலிடப்படாத காசோலைகள் என்பவற்றின் மொத்தத் தொகை ரூபா 1,563 மில்லியனாக இருந்த போதும் இவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத மீதி தொடர்பாக தீர்வு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, விசேட விசாரணைகள் பலவற்றில் ஈடுபட்டுள்ளதோடு அதற்கு அவசியமான வசதிகள் / தரவுகள் தயாரிக்கும் நடவடிக்கையும் செய்யப்படுவதால் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தொடர்பில் செய்யப்படும் செயற்றிட்டத்தில் சிறு தாமதம் ஏற்பட்டுள்ளது. | தீர்க்கப்படாத வங்கி மீதி உடனடியாக இனங் காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கு பொருத்தமான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் இறுதி 03 காலாண்டுகளில் வரிச்செலவு மற்றும் வரிப் பொறுப்பு கணக்கிடலில் திறைசேரி முறியூடாக காலக்கழிவு இலாபம் (Amortization gain on T.bonds) ரூபா 4,807,290,569 கூடுதலாக கணக்கிடப்பட்ட காரணத்தால் வருடத்தின் வரிச் செலவு மற்றும் வரிப் பொறுப்பு ரூபா 673,020,680 அதிகமாகக் | குறிப்பிட்ட மதிப்பீட்டைத் திருத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் கணக்கீட்டில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. மேலும் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் வருமான வரி வருமானம் (Tax Return) தயாரிக்கும்போது சரி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே, 2018 ஆம் ஆண்டிற்குரிய எந்தவொரு வருமான வரித் தொகையும் வருமான வரித் திணைக்களத்திற்கு | வருடாந்த வரிச் செலவு மற்றும் வரிப் பொறுப்பு பிழையின்றி கணக்கிடுவதற்கு நிறுவனம் ஆவண செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டுள்ளது. | மேலதிகமாக (Over Payment) செலுத்தப்படவில்லை. | |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளுக்கமைய நிலையான சொத்துப் தொகுதிகள் 04இன் 2018 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 900,608,654ஆன போதும் தேய்மானம் வேறுபடுத்தும் அட்டவணையில் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 556,974,678ஆக இருந்தமையால் ரூபா 343,633,976ஆன வேறுபாட்டை அவதானிக்க முடிந்தது. | சுட்டிக் காட்டப்பட்டுள்ள வேறுபாடு தற்போது இனங் காணப்பட்டுள்ளதோடு அதற்கான சீராக்கங்கள் அடுத்த நிதிக்கூற்றுக்களின் மூலம் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளேன் | நிலையான சொத்துக்களின் உண்மையான பெறுமதியை நிதிக்கூற்றில் காட்டுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| <u>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு</u> | <u>இணக்கமின்மைகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ம் பிரிவு மற்றும் 2016 ஏப்ரல் 29 ம் திகதிய நிதி அமைச்சின் PE/COP/POLI/Circulars மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் இலக்கம்: 03/2016 கடிதம் | நிதியத்திற்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளின் செய்தொழில் வருமானம் மீதான உழைக்கும் போது செலுத்தும் வரி அவ்வதிகாரிகளிடமிருந்து அறவிடப்படாது மீளாய்வாண்டில் ரூபா 20,947,681 தொழக நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2016 பெப்ரவரி 26 ஆம் திகதி இடம்பெற்ற அரச கணக்குக் குழுநிலை கூட்டத்தில் உழைக்கும்போது செலுத்தும் வரி நிதியத்தின் கொடுப்பனவு | இந்த வருடம் தொடக்கம் உழைக்கும் போது செலுத்தும் வரி ஊழியர்களின் வேதனத்தில் அறவிடுவதற்கு நிதிச் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதோடு அது 2019.04.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தும் முகமாக இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களின் | சுற்றறிக்கை அறிவுத்தல் படி உழைக்கும் போது செலுத்தும் வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியம். |

| | |
|---|---|
| தொடர்பாக 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தின் அறிவுரை மற்றும் அரச நிதிச் சுற்றுநிருபத்திற்கு பொருத்தமான முறையில் ஒழுங்கு நடவடிக்கை பொருத்தமானதாக இற்றைப்படுத்தல் செய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தப்பட்ட போதும் அவ்வாறான வேலைத் திட்டமொன்று 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்படவில்லை. | மாதாந்த வேதனத்தில் உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிடப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 190,617 மில்லியன் இலாபமான போதும் அதற்கு ஒப்பாக முந்தைய ஆண்டின் இலாபம் ரூபா 202,947 மில்லியனாகும். இதற்கு அமைய நிதி விளைவுகளில் ரூபா 12,330 மில்லியனான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த வீழ்ச்சிக்கு 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் கீழ் வரி விகிதாசாரம் உயர்வடைந்தமை காரணமாக நிதியத்தின் வருமான வரிச் செலவினம் ரூபா 11,823 மில்லியனால், அதாவது 63 சதவீதத்தினால் உயர்வடைந்தமை பிரதான காரணமாக காணப்பட்டது.

1958 இன் 15 ம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 14 ஆவது பிரிவிற்கமைய நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வட்டி நலன்களில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை 13.75 முதல் 10.5 சதவீதம் வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளதோடு, 2015 தொடக்கம் 2017 வரை மாற்றமின்றி அந்த விகிதாசாரத்திலேயே நிலவியுள்ளது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டில் அவ்வாறு செலுத்தப்பட்ட வட்டி வீதம் 9.5 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதோடு, அந்த வட்டி வீதத்தை செலுத்துவதற்கான இலாபம் போதாமையால் மீளாய்வு ஆண்டில் இலாபத்தை சமப்படுத்தும் ஒதுக்கத்திலிருந்து ரூபா 6,000 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டை விநியோகித்தல் மற்றும் கணக்கு மீதி பரிசோதித்தலுக்கான இயந்திரம் (Kiosk) பொருத்தும் வேலைத் திட்டத்தின் முதலாவது படிமுறையின் கீழ் 2008 திசெம்பர் மாதம் ரூபா 12,609,750 செலவிட்டு தயாரிக்கப்பட்ட 15,000 அட்டைகளும், ரூபா 2,750,570 செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்ட Kiosk இயந்திரங்கள் 05 பயன்பாடின்றி உள்ளன. இவ்வாறு அச்சிடப்பட்ட அட்டைகள் 10 வருட காலமாக களஞ்சியப்படுத்தப்பட்டமை மற்றும் இயந்திரம் கொள்வனவு செய்த நாள் முதல் செயற்படுத்தப்படாது அதற்காக மேற்கொள்ளப்பட்ட முழு செலவான ரூபா 15,360,320 நிதியத்திற்கு நட்டமாக இருந்தது. | பதில் முன்வைக்கப்படவில்லை. | அங்கத்தவர் நிதியத்தின் செலவுகளை வகிக்கும்போது வினைத்திறனான உற்பத்தித் திறனுடன் சிக்கனமாக கையாளுவதற்கு நிறுவனம் வழிவகை செய்தல் அவசியம். |

3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) நிதியத்தின் புதிய முதலீட்டு வழிகாட்டியின் படி, திறைசேரி முறி மற்றும் விலைப்பட்டியல் முதலீடுகளில் குறிப்பிட்ட பகுதியினை சேகரிப்பதற்கும் விற்பனை செய்வதற்குமாக (held to collect and sell) வைத்திருத்தல் வேண்டும். எவ்வாறெனினும், 2018 திசெம்பர் 31 ஆம் திகதி நிதியத்தில் ரூபா 2,119,231 மில்லியன் திறைசேரி முறைகள் மற்றும் விலைப்பட்டியல் | 2018 யூன் 30 ஆம் திகதி நிதிச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டி நூலின் 2.3 பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு, ஊழியர் சேமலாப நிதியம் முதலில் திறைசேரி விலைப்பட்டியல் மற்றும் முறிகள் கொள்வனவு செய்வது இலாப வருமானம் சேகரிப்பதற்காக முதிர்வடையும் வரை அம்முறிகள்/ விலைப்பட்டியல்களை மறித்து | நிதியத்தின் முதலீட்டுக் கொள்கை வெளியீடுகள் மற்றும் முதலீட்டு வழிகாட்டி நூலின் ஒழுங்குகளுக்கும் அமைவாக நிதியத்தினை முகாமைத்துவப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதலீடுகள் என்பவற்றின் வட்டி வருமான சேகரிப்பை (held to collect) முதிர்வடையும் வரை வைத்திருக்கும் முதலீடாக அறிக்கையிடப்பட்டிருந்தது.<br><br>அவ்வாறே சகல அரச பிணைப் பொறுப்புகள் முதிர்வடையும் வரை வைத்திருக்கும் முதலீடாக அறிக்கையிட்டுப் பேணப்படும் காரணத்தால் அவற்றை இரட்டைச் சந்தையினுள் விற்பனை செய்து பெறக்கூடிய நிதி அனுகூல வருமானத்தைப் பெறுவதற்கு நிதியம் தவறியுள்ளது. அதற்கமைய 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் திறைசேரி முறி மீதான மூலதன இலாபம் முறையே ரூபா 1,171 மில்லினும் ரூபா 612 மில்லியனுமான போதும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் திறைசேரி முறிகள் மீதான மூலதன இலாபம் எதுவும் ஈட்டப்பட்டிருக்கவில்லை. | வைக்கப்படுவதினூடாகவாகும். அவ்வாறே 2.3 ஆம் பிரிவின் கீழ் ஊழியர் சேமலாப நிதியத்தினால் குறுகிய கால இலாப நோக்கில் திறைசேரி முறிகள் அல்லது விலைப்பட்டியல் கொள்வனவு செய்வதற்கு ஊழியர் சேமலாப நிதியத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியம் மூலம் திறைசேரி விலைப்பட்டியல்கள் / முறிகள் "hold to collect and sell " முறைக்கு கொள்வனவு செய்யப்படாமை அவசர தேவைகள் காரணமாகவும் திறமுறையான வளப் பங்கீட்டுக்கு (SAA) பொருத்தமானதாகவும் அவதானமான முகாமைத்துவம் போன்ற குறித்த காரணங்களுக்காக மட்டுமே ஆகும். | |
| (ஆ) | நிதியத்தினால் 2013 ஆம் ஆண்டில் கண்வில் ஹோல்டிங்ஸ் ஹோட்டல் தொகுதியை நிர்மாணிப்பதற்கு ரூபா 5,000 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2013 யூன் 04 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட பங்கு உரிமையாளர் ஒப்பந்தம் பிரகாரம் அந்த வணிக சங்கத்தின் பங்குகள் 2015 ஆம் ஆண்டில் பங்குச் சந்தையில் நிரல்படுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறெனினும், 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த வணிக சங்கத்தின் பங்குகள் பங்குச் சந்தையில் நிரல்படுத்தப்படாததோடு, சங்கத்தின் கட்டுமாணப் பணிகளை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் பிரதி முதல்வரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதி கட்டுப்பாடற்ற காரணத்தால் குறித்த சங்கத்தின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியாக்கப்படுவதற்கேற்ற செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே குறித்த சங்கம் 2018.12.28 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியின் படி நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சிற்கு சொந்தமான அரச கூட்டுத்தாபனமாகையால் அதற்குரிய தீமானங்களை எடுப்பது நிதி அமைச்சாகும். அதற்கேற்ப அரசாங்கத்தினால் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் எங்கள் முதலீட்டுக்கான வரப்பிரசாதம் தீர்மானிக்கப்படும். | முதலீடொன்றை மேற்கொள்ளும்போது அங்கத்தவர்களுக்கு உயரிய வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்றவாறு ஆபத்துக்கள் குறைந்த முதலீடொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை நிரல்படுத்தப்பட்ட மற்றும் நிரல்படுத்தப்படாத 9 கூட்டுத்தாபனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,607 மில்லியன் முதலீட்டினால், அம்முதலீடு மேற்கொள்ளப்பட்ட நாள் முதல் நிதியத்திற்கு வரப்பிரசாதம் கிடைக்கப்பெறவில்லை. அத்துடன் Palm Garden Hotels PLC , Ceylon Hotels Corporation PLC, Sri Lankan Airlines மற்றும் The Finance Company PLC போன்ற கூட்டுத்தாபனங்களில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை நட்டத்துடன் இயங்கியமை அவதானிக்கப்பட்டது. | யுத்தம் முடிவடைந்ததுடன் முழுப் பொருளாதாரத்திலும் விசேடமாக சுற்றுலா, சொத்துக்கள் போன்ற களங்களில் ஏற்பட்ட உத்வேகம் காரணமாக அதனுடன் தொடர்புபட்ட கூட்டுத்தாபனங்களில் இலாபமீட்டக்கூடிய வழிவகைகள் உயரும் என்பதால் அதற்கமைய குறித்த கூட்டுத்தாபனங்களின் விலை உயர்வடையும் என எதிர்பார்த்து நீண்டகால நோக்கில் முதலீடு செய்யப்பட்டது. ஆயினும் பிற்காலத்தில் ஏற்பட்ட தேசிய மற்றும் வெளிக் காரணிகளால் மொத்தச் சந்தையில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி ஏற்படவில்லை. | முதலீடொன்றை மேற்கொள்ளும்போது அங்கத்தவர்களுக்கு உயரிய வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்றவாறு ஆபத்துக்கள் குறைந்த முதலீடொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முதற் கட்டம் 2007/2008 ஆம் ஆண்டுகளிலும் இரண்டாம் கட்டம் 2010/2011 ஆம் ஆண்டுகளிலும் மூன்றாம் கட்டம் 2016/2017 ஆம் ஆண்டுகளிலும் நடைமுறைப்படுத்தவிருந்த அங்கத்தவர்களை மீளப் பதிவு செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் 2008 தொடக்கம் 2018 திசெம்பர் 31 வரை தொழில் திணைக்களத்தின் வருடாந்த மதிப்பீட்டின் படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூபா 247,153,011 மொத்தமாக செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க, விரலடையாளம் பெற்றுக் கொள்ளப்பட்டஅங்கத்தவர் எண்ணிக்கை மதிப்பிடப்பட்ட அங்கத்தவரின் விகிதமாக முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களின் கீழ் முறையே 38 சதவீதம், 25 சதவீதம் மற்றும் 14 சதவீதம் ஆக அடையப்பட்ட முன்னேற்றம் குறைந்த | ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களின் விரலடையாளம் மற்றும் புகைப்படத்தைப் பெற்றுக் கொண்டு அங்கத்தவர்களை மீளப் பதிவு செய்யும் செயற்றிட்டத்தை வெளிவாரி நிறுவனமொன்றிடமிருந்து செய்து கொள்ளுவதற்கு எதிர்பார்த்த போதும் சேவையை வழங்குவதற்கு உரிய நிறுவனம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால் இச்செயற்றிட்டத்தை திணைக்கள ஊழியர்களை ஈடுபடுத்தி நிறுவனங்களுக்குச் சென்று தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும், இக்காரியங்கள் திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக கடமையாதலால் அந்த அதிகாரிகளுக்கு முழு நேரமும் இந்த செயற்றிட்டத்தில் | அங்கத்தவர் நிதியத்தின் செலவுகள் வினைத்திறனான உற்பத்தித் திறனுடன் சிக்கனமாக கையாள்வதுடன் குறித்த முன்னேற்றத்தை கைப்பற்ற கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மட்டத்திலேயே காணப்பட்டது. | ஈடுபட முடியாததால் எதிர்பார்த்த இலக்கை எட்டுவதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | Kiosk இயந்திரம் பொருத்தும் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் ரூபா 14,917,500 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 30 இயந்திரங்களில் 2018 திசெம்பர் 31 ம் தினத்தில் 10 இயந்திரங்கள் செயற்படாது இருந்தன. இதனால் செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | 2015 ம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 30 Kiosk இயந்திரங்களில் 2018.12.31 ஆம் திகதியில் 20 இயந்திரங்கள் செயல்படும் நிலையில் உள்ளன. | செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நடாத்த அவசியமான வழிமுறைகளைப் பின்பற்றல் வேண்டும். |
| (இ) | அனுகூலங்களை பெற்றுக் கொள்வதற்காக அங்கத்தவர்களிடமிருந்து 18 மாவட்ட தொழில் அலுவலகங்களில் 2016 சனவரி 01 தொடக்கம் 2018 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களுள் ரூபா 17,923,106 இற்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்த 112 விண்ணப்பங்கள் கொடுப்பனவு செய்வதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்ட போதும் பல்வேறு காரணங்களுக்காக அவை நிராகரிக்கப்பட்டிருந்தன. அந்த விண்ணப்பங்களுள் 90 விண்ணப்பங்கள் (80 சதவீதம்) தொடர்பாக அவற்றை சமர்ப்பித்த தினத்திலிருந்து 2019 மார்ச் 01 ஆந் திகதி வரையான கடந்து சென்ற காலம் 06 மாதம் முதல் 03 வருடங்களுக்கு மேற்பட்டிருந்தாலும் அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | யாரேனும் அங்கத்தவர் அனுகூலத்திற்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் தொழில் திணைக்கள தரவுகள் அலகில் உள்ள தகவல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியில் உள்ள தரவுகள் அலகில் உள்ள தகவல்களுடன் வேறுபட்டுக் காணப்படுவதால் , சேவை வழங்குநர் நிறுவனத்தினால் சந்தாப் பணம் வரவு வைக்கும் போது ஏற்பட்ட தவறுகள் காரணமாக சந்தாதாரர் கணக்குகளில் மாற்றம் செய்யப்பட வேண்டியதுடன், அங்கத்தவரின் அனுகூல விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிட்ட சேவை முடிவுறுத்திய திகதி வேறுபடும் சந்தர்ப்பங்களில் நிறுவனத்திடமிருந்து தரவுகளைப் பெற்று அவற்றைத் திருத்த வேண்டியிருத்தல் போன்ற நடவடிக்கைகளால் குறித்தளவு காலம் செலவிடப்படுகின்றது. | அங்கத்தவர்களுக்கு தாமதமின்றி அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்க முடியுமான வரையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் படி 2018 ஆம் ஆண்டின் இறுதியில் தனியார் நிறுவனங்களில் மற்றும் அரை அரச நிறுவனங்களின் முழு செய்தொழிலாக அறிக்கையிடப்பட்ட 3,727,217 இல் ஊழியர் சேமலாப | எந்தவொரு நிதியத்திலும் பங்களிப்பை செய்யாத அங்கத்தவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் பெற்றுக் கொடுத்தல் சம்பந்தமாக நடவடிக்கை மற்றும் அதற்குரிய சட்ட ரீதியான நிலைமைகள் | தனியார் நிறுவனம் மற்றும் அரை அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுவோரில் அதிக எண்ணிக்கையானோருக்கு நிதியத்தில் அங்கத்துவம் பெற்றுக் கொடுக்கக் |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்தில் பங்களிப்பு செய்துள்ள உயிர்ப்புள்ள அங்கத்தவர் எண்ணிக்கை 2,559,319 அதாவது 68.7 சதவீதம் ஆகும். மற்றைய அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதியத்தில் பங்களிப்பை வகிக்கும் ஊழியர் எண்ணிக்கை 9.7 சதவீதம் ஆக மட்டுமுள்ளதால் மிகுதி 21.6 சதவீதமானவர்கள் எந்தவொரு நித்தியத்திலும் பங்களிப்பை செலுத்தவில்லை. அவர்களுக்கு நிதியத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியமை அவதானிக்கப்பட்டது. | தொடர்பாக பொதுமக்களை தெளிவுபடுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் தொலைகாட்சி விளம்பரம் ஊடாக பிரசார நடவடிக்கை எடுத்தல், வானொலி விளம்பரம் ஊடாக பிரசார நடவடிக்கை எடுத்தல், நடமாடும் சேவை மூலமாக அறிவித்தல் செய்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | கூடிய வழிவகைகள் ஏற்படுத்தல் தொடர்பாக நிறுவனத்தின் கவனத்தை ஈர்க்கும் வேலைத்திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும். |
| (உ) | ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்யப்படாது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் மட்டுமே பதிவு செய்திருந்த சேவைவழங்குநர்களின் எண்ணிக்கை 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 14,156 ஆக இருந்ததோடு அந்த சேவை வழங்குநர்களில் அத்தினத்திற்கு சேவையில் ஈடுபடுவோரின் பொறுப்பு நிதிச் சபைக்கு கிடைக்கப் பெற்ற சந்தாப் பணத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 148,366,135 ஆகும். அதற்கமைய சேவை வழங்குநர்களின் நிதியத்தில் பதிவு செய்து கொள்ளுவதற்கு சேவையில் ஈடுபடுவோர் பொறுப்பு நிதிச் சபையுடன் இணைந்து வேலைத் திட்டமெதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு ஊழியர் சேமலாப நிதியத்தில் பங்களிப்பு செய்வதற்கு ஊழியர் சேமலாப நிதியத்தின் சட்டத்தின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்காத போதும் சேவையில் ஈடுபடுவோர் பொறுப்பு நிதியத்தின் சட்டத்தின் படி சுய தொழிலில் ஈடுபடுவோருக்கு சேவையில் ஈடுபடுவோர் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய இடமளிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்யாது சேவையில் ஈடுபடுவோர் பொறுப்பு நிதியத்தில் மட்டும் பதிவு செய்த சேவை வழங்குநர்களின் எண்ணிக்கையில் சுய தொழில் புரிவோரும் அடங்குவர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் மட்டுமே பதிவு செய்யப்பட்ட (சுய தொழில் புரிவோர் அல்லாத) அங்கத்தவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுத் தருவதற்கு வேலைத் திட்டமொன்று ஏற்படுத்தப்படல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களை மீளப் பதிவு செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு ரூபா 3,261,600 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 24 மடிக்கணணிகள் 2019 மே | மேற்கூறிய செயற்றிட்டத்திற்காக அவசியமான மடிக்கணணிகள், அதற்குரிய உதிரிப் பாகங்கள், ஸ்கேனர், புகைப்படக் கருவி முதலிய உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு மேம்பாட்டு நடவடிக்கைகள் 2018 | பொருத்தமான தேவைப்பாட்டினை இனங் கண்டதன் பின்னரே சொத்துக்களைக் கொள்வனவு செய்யவும் அவற்றை வினைத்திறனான |

| | | |
|---|---|---|
| 23 ஆந் திகதி வரையிலும் குறித்த அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியசாலையில் பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தது. | ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டாலும் 24 மடிக்கணணிகள் மட்டுமே கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. உதிரிப் பாகங்கள் தொகுதியும் தேவைப்படுவதால் மடிக்கணணியை மட்டும் பகிர்ந்தளிக்க முடியாததால் சகல உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டதன் பின் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | முறையில் பாவனைக்குட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விரலடையாளம் மற்றும் புகைப்படம் பெற்றுக்கொள்ளும் செயற்றிட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டிற்குள் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதற்குரிய செலவு விடயங்களின் கீழ் பெறுகைகள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கேற்ப 221-2-4-1409 செலவின விடயத்தின் கீழ் ரூபா 11,000,000 ஆன செலவின வருமானச் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும் அச்செலவு விடயத்தின் கீழ் பெறுகைகள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 221-2-4-2103 இலக்க மூலதன செலவு விடயத்தின் கீழ் ரூபா 17,000,000 நிதி ஒதுக்கப்பட்டிருப்பினும் ரூபா 4,321,700 தொகையான பெறுகைகள் மாத்திரமே திட்டமிடப்பட்டிருந்தன. அதற்கேற்ப தேவைப்பாட்டினை இனங் கண்டு பொருத்தமான திட்டத்தினை தயாரிக்காது நிதி ஒதுக்கப்படும் காரணத்தினால் பின்னர் நிதி மாற்றம் செய்வதும் நிதி எஞ்சுவதும் இடம்பெற்றுள்ளது. அவ்வாறே பெறுகைகள் திட்டம் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டிற்கு | 2017 ஆம் ஆண்டில் திணைக்கள உத்தியோகத்தர் குழாமைக் கொண்டு இந்தக் காரியங்களை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது, 2018 ஆம் ஆண்டிற்கான நிதி கேட்கப்பட்டதன் பின்னராதலால் 221-2-4-1409 செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி எஞ்சியிருந்தது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். | பொருத்தமான தேவைப்பாட்டினை இனங்காண்பதோடு பெறுகைகள் திட்டமிடுவதோடு அதற்கமைய நிதி ஒதுக்கீட்டைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நேரொத்து இல்லாமையும் அவதானிக்க முடிகிறது.

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் சேமலாப நிதியத்தில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் குழாத்திற்கு நிதிக் குழு மூலம் அனுமதிக்கப்பட்ட பதவியணி இல்லாமையால், அதற்காக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 184, 176, மற்றும் 166 ஆன பதவியணியினர் நியமிக்கப்பட்டிருந்தனர். | ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைய ஊழியர் சேமலாப நிதியத்தின் காரியங்களுக்காக தேவைப்படும் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களை நியமித்துள்ளது. எவ்வாறாயினும், நியமிக்கப்பட்ட ஊழியர் குழுவில் யாரேனும் ஒருவர் ஓய்வு பெறுவாராயின் அந்தப் பதவியை நிரப்புவதற்கு அடுத்த ஊழியர் குழாமைநியமிக்கும் வரை காலதாமதம் ஏற்படலாம். அதற்கமைய, கணக்காய்வு அவதானத்திற்குரிய ஊழியர் எண்ணிக்கை குறித்த வருட இறுதியில் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டு சேவையாற்றியோரின் எண்ணிக்கை ஆகும். | சரியான பதவியணி மதிப்பீடு செய்யப்பட்டு போதியளவான பதவியணிகாகன அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) நிதியத்தின் ஊழியர் ஒருவரின் மொத்த கிரயம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் உள்ளவாறு கீழே காட்டப்பட்டுள்ளது.

| 2018 ஆம் ஆண்டு | | 2017 ஆம் ஆண்டு | | இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் பதவியணி, இலங்கை | நிதியத்தின் தனி நபர் கிரயத்தின் வேறுபாட்டைக் குறைப்பதற்கு |
|---|---|---|---|---|---|
| தொழிலாளர் திணைக்களம் | இலங்கை மத்திய வங்கி | தொழிலாளர் திணைக்களம் | இலங்கை மத்திய வங்கி | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சம்பளக் கிரயம் (ரூபா’000) | 407,899 | 559,472 | 387,855 | 459,475 | மத்திய வங்கியின் பதவியணியில் குறித்த திணைக்களத்திற்கு இணைப்பு செய்யப்பட்ட பதவியணியாகும். அந்த பதவியணிக்காக ஏனைய அரச வங்கிகளுக்கு ஈடான வேதன அமைப்பொன்றைத் தயாரித்துள்ளதோடு, அதை அரச திணைக்களங்களின் வேதனங்களுடன் ஒப்பிட முடியாது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| உள்ளபடியான பதவியணி | 861 | 166 | 805 | 176 | | |
| ஊழியர் ஒருவருக்கான கிரயம் (ரூபா.’000) | 474 | 3,370 | 482 | 2,611 | | |
| ஊழியர் ஒருவருக்கான கிரயத்திலான வேறுபாடு (ரூபா’000) | 2,896 | | 2,129 | | | |

ஊழியர் சேமலாப நிதியத்தில் தொழில் திணைக்களத்தின் தனி நபர் கிரயத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்தின் தனி நபர் கிரயம் 2017 ஆம் ஆண்டில் ரூபா 2,129,000 இனாலும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,896,000 இனாலும் அதிகரித்து இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்குப் பிரதானமாக தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வேதனங்களுக்கிடையில் நிலவும் சம்பள வேறுபாடே காரணமாக உள்ளது.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) தொழில் திணைக்களத்தில் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவில் 2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகைத் திட்டத்திற்கமைய சமூகப் பாதுகாப்பைத் திடப்படுத்திடும் உபாய வழிமுறைகளின் கீழ் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை ஊழியர் சேமலாப நித்திய இலக்கமாக அமைப்பதற்கும் விரலடையாளத்தைப் பெற்றுக் கொள்ளும் செயற்றிட்டத்தின் கீழ் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த | தேசிய அடையாள அட்டை இலக்கத்தை ஊழியர் சேமலாப நிதியத்தின் பிரதான தரவாக அமைக்கும் செயற்றிட்டத்தை செயற்படுத்தல் தொடர்பாக குழு அறிக்கையை தயாரிப்பதற்கிடையில் 2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகைத் திட்டத்திற்கமைய அந்த செயற்றிட்டத்தினூடாக அமுல்படுத்த திட்டமிடப்பட்டிருந்த செயல்கள் 2018 ஆம் | செயலாற்றுகைத் திட்டத்தினுள் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களை நிறைவேற்ற வினைத்திறனான மற்றும் உற்பத்தித் திறனான வழிமுறைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| சட்டதிட்டங்களை மேம்பாடு செய்தல், மாவட்ட தொழில் அலுவலகங்களில் தொழில்நுட்ப கொள்திறனை முன்னேற்றல், முன்னோடி செயற்றிட்டத்தை (Pilot Project) ஆரம்பித்தல் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை ஊழியர் சேமலாப நித்திய இலக்கமாக பதிவு செய்தல் போன்ற செயல்கள் மீளாய்வு ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஆண்டில் நிறைவேற்ற ஊழியர் சேமலாப நிதியம் தவறியதால் எதிர்காலத்தில் இது தொடர்பாக அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். |

**4.2 அரசாங்க கணக்குகள் குழுவின் பரிந்துரைகள் மற்றும் தற்போதைய நிலைமை**

--------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2016 பெப்ரவரி 26 ஆம் திகதி 09 ஆம் இலக்க பரிந்துரைக்கமைய நிதியத்தின் தரவுத் தொழில்நுட்ப செயல்முறையை முன்னேற்றுவதற்காக தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஒன்றிணைந்து ஒரு கணனி வேலைத் திட்டத்தைத் தயாரிக்கும் முயற்சி தொடர்பான அறிக்கையொன்று 2016 மார்ச் 23 ம் திகதிக்கு முன்னதாக செயற்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அரசிற்கு வழங்கப்படும் கடன் தொகையில் செயற்படும் மூலதனச் சந்தையை முன்னேற்றும் செயற்றிட்டத்தின் கீழ் வியாபார செயல்முறையை மீள்பரிசீலனை செய்வதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவியை பெற்றுத் தருவதற்கு உடன்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் ஒன்றிணைந்த புதிய தரவுத் தொழில்நுட்ப அலகொன்றை செயல்படுத்துவதற்கு அவசியமான அடிப்படை நடவடிக்கைகள் | அரச கணக்கீட்டு செயற்குழுவின் பரிந்துரைக்கமைய இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களம் மூலம் அதிக பரந்த மற்றும் உபயோக ரீதியாக, ஒன்றிணைந்த புதிய தரவு தொழில்நுட்ப அலகொன்றை செயற்படுத்த அவசியமான அடிப்படை நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றது.<br><br>இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியூடாக அரசுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் “மூலதனச் சந்தை முன்னேற்ற செயற்றிட்டம்” தொடர்பாக கடன் ஒப்பந்தம் இலங்கை அரசின் சார்பில் நிதி அமைச்சு மற்றும் ஆசிய அபிவிருத்தி வாங்கிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தமாகையால் குறித்த கடன் ஒப்பந்தம் நிதி அமைச்சினால் பெற்றுக் கொள்ளும் தேவைப்பாடு | அரச கணக்கீட்டு செயற்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும் அவற்றின் பெறுபேறு மற்றும் ஏனைய அவசியமானதரவுகளைக் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஊழியர் சேமலாப நிதியத்தின் தலைவரால் கணக்காய்வில் தெரிவிக்கப்பட்டிருந்தததது. அவ்வாறு அச்செயற்றிட்டம் தொடர்பாக கடன் ஒப்பந்தம், செயற்றிட்ட அறிக்கை மற்றும் செயலாக்கல் திட்டம் போன்ற தரவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தலின் பெறுபேற்றைப் பரீட்சிக்க முடியாதிருந்தது. | காணப்படுகிறது. | |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கு சுதந்திரமான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாததோடு இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிய பிரிவின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை இலங்கை மத்திய வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தொழில் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 14 பேராகவும் உண்மையான எண்ணிக்கை 09 பேராகவும் உள்ளது. திணைக்களத்தின் கீழ் 57 பிரதேச அலுவலகங்கள் இயங்குவதும் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கைக்கேற்ப உண்மையான எண்ணிக்கை போதாமையால் ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்காய்வு நடவடிக்கைக்கு அதிக கவனம் செலுத்துவதற்கு | 2018.12.31 ஆம் திகதியில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குரிய அதிகாரிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 10 ஆக அதிகரிக்கப்பட்ட போதும் இது வரையிலும் இணைப்பு செய்யப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 07 ஆக மட்டுமே அதிகரித்துள்ளது. அவ்வாறே நீண்ட காலமாக இத் திணைக்களத்தின் முக்கிய சேவை அதிகாரிகள் அதிகளவுஎண்ணிக்கையில் வெற்றிடங்கள் காணப்படுவதால் எதிர்காலத்தில் திணைக்களத்தின் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அதிகாரிகளை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு போதியளவு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்து உள்ளகக் கணக்காய்வைத் திடப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இடமளிக்க முடியாதுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வைத் திடப்படுத்துவதற்கு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்தும் அரச கணக்கீட்டு செயற்குழு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்ட போதும், அதற்கேற்ப போதியளவு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்து கணக்காய்வை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு குழு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| நிதியத்திற்குரிய கணக்காய்வுக் குழு கூட்டம் தொழில் அமைச்சின் கீழ் அனைத்து நிறுவனங்களுடனும் நடைபெறும். அதற்கு மேலதிகமாக தொழில் திணைக்களத்தின் கீழ் வேறாகக் கணக்காய்வுக் குழுவொன்று நடாத்தும்போது அதற்கு நிதியத்தின் அடிப்படை நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இலங்கை மத்திய வங்கி மற்றும் அதன் உள்ளகக் கணக்காய்வாளர்களின் பங்களிப்பு இருக்கவில்லை. ரூபா 2,289 பில்லியன் வரையிலுள்ள ஒரு நிதியத்திற்கு வேறாகக் கணக்காய்வுக் குழுவொன்று, நிதியத்தின் நடவடிக்கைக்காக இணைப்பு செய்யப்பட்டிருக்கும் தொழில் திணைக்களத்திலும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளின் பங்களிப்புடன் நடாத்துவதற்கான அவசியம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிய திணைக்களம் ஒவ்வொரு காலாண்டுக்கு ஒரு தடவை தொழில் மற்றும் தொழிற்சங்க தொடர்புகள் அமைச்சினால் நடாத்தப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு சமூகமளிக்கும். இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிய திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை இலங்கை மத்திய வங்கியின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படுவதோடு, இலங்கை மத்திய வங்கியின் நிதிக் குழு அங்கத்தவரின் பங்களிப்புடன் அந்த கணக்காய்வு நடவடிக்கை மீளாய்வு செய்யப்படும். | நிதியத்திற்கு சுதந்திரமான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |